# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1793 - 2013 ජනවාරි මස 11 වැනි සිකුරාදා - 2013.01.11

*1793 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 27 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, சனவரி மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2013

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களங்களில் அவற்றின் எதிரில் காட்டப்பட்டுள்ள வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்குத் தகைமை பெற்றுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 67 ஆகும்.

2. எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கின்றபோது ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. தமது விண்ணப்பத்தில் இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பதவிகளை விருப்புத்தேர்வு ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுதல் வேண்டும். உதாரணமாக, முதலாவது விருப்புத் தேர்வு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் நிலவும் உதவிப் பணிப்பாளர் பதவிக்கும், இரண்டாம் விருப்புத் தேர்வு ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கும், மூன்றாம் விருப்புத் தேர்வு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி வனப் பாதுகாப்பு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் ஒருவர் உரிய குறியீட்டு இலக்கங்களை 051, 052, 061 என்றவாறு விண்ணப்பத்திலுள்ள "குறியீட்டு இலக்கம்" என்ற நிரலில் குறிப்பிடுதல் வேண்டும்.

| இலக்கம் | திணைக்களம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | இலங்கை மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 02 | 011 |
| 2. | அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | அரசாங்க உதவி இரசாயனப் பகுப்பாய்வாளர் | 03 | 021 |
| | | சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தொடர்பான உதவிப் பகுப்பாய்வாளர் | 01 | 022 |
| 3. | நீர்ப்பாசனத் திணைக்களம் | உதவி மண் இரசாயனவியலாளர் | 01 | 031 |
| 4. | தொழில் திணைக்களம் | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 03 | 041 |
| 5. | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் | 02 | 051 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | 05 | 052 |
| 6. | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | உதவி வனப் பாதுகாவலர் | 05 | 061 |
| 7. | வளிமண்டலவியல் திணைக்களம் | வானியலாளர் | 14 | 071 |
| 8. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | உதவிப் பணிப்பாளர் (விலங்கியல்) | 01 | 081 |
| 9. | சுகாதார சேவைகள் திணைக்களம் | உயிர் இரசாயனவியலாளர் | 01 | 091 |
| | | பௌதிகவியலாளர் | 12 | 092 |
| | | மருந்துப் பகுப்பாய்வாளர் (இரசாயனவியல்) | 01 | 093 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயற்கை உற்பத்திகள்) | 03 | 094 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பூச்சியியல்) | 01 | 095 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தடுப்பு மருந்து மற்றும் உற்பத்தி) | 01 | 096 |
| | | ஆராய்ச்சி உத்தியோகத்தர் நுண்ணுயிரியல் (பக்டீரியாவியலாளர் மற்றும் வைரஸ் வியலாளர்) | 04 | 097 |
| | | ஆய்வு உத்தியோகத்தர் (உயிர் இரசாயனவியல்) | 02 | 098 |
| | | பிரதேச மலேரியா ஒழிப்பு அலுவலர் | 02 | 099 |
| | | இரசாயனவியலாளர் | 02 | 910 |
| | | விஞ்ஞான உத்தியோகத்தர் | 01 | 911 |

3. இவ்வறிவித்தலில் ''செயலாளர்'' என்ற சொல், பொது நிர்வாக அமைச்சின் செயலாளரையும், ''சேவை'' என்ற சொல் இலங்கை விஞ்ஞான சேவையையும் குறிக்கும்.

4. **எழுத்துப் பரீட்சை.**- இப்பரீட்சை பின்வரும் வினாப்பத்திரங்களை உள்ளடக்கியதாக அமையும் :-

(1) நுண்ணறிவுச் சோதனை

(2) பொது அறிவு

5. **பரீட்சைத் திகதி.**- இப்பரீட்சை 2013, மே மாதம் கொழும்பில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

6. **வாய்மொழிப் பரீட்சை.**- எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் போதுமானது என குறித்துரைக்கப்படும் உயர் மட்டத்திலான மொத்தப் புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று அல்லது சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதற்கான திகதி செயலாளரினால் தீர்மானிக்கப்படும். (ஒவ்வொரு பதவிக்குமுரிய அனுமதியளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க நேர்முகப் பரீட்சையின் தன்மை தீர்மானிக்கப்படும்.)

7. நியமனம் செய்யப்படுவோரின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

8. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் நிபந்தனைகளுக்கும் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1988, யூன் 7 ஆந் திகதிய 509/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட) விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்ட வகையில் தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர். அதற்கிணங்க இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். தகுதிகாண் காலம் 3 வருடங்களாகும். அந்த 3 வருட காலத்தில் I ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அத்துடன் நியமனத் திகதியிலிருந்து 6 வருட காலத்தினுள் II ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் நியமனம் கிடைத்து 5 வருடங்கள் பூர்த்தியடைய முன்னர் 2007.05.28 ஆந் திகதிய 7/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

8.1 தன்னிடம் ஒப்படைக்கப்படும் பதவியில் கடமையினை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறுமிடத்து மற்றும்/அல்லது நியமிக்கப்படும் பதவியை அல்லது நியமிக்கப்படும் பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கும் அல்லது பொறுப்பேற்பதைத் தவிர்க்கும் விண்ணப்பதாரர்களின் நியமனங்கள் இரத்துச்செய்யும் அதிகாரத்தை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது.

9. **கட்டமைப்பு மற்கறும் மாதாந்த சம்பளத் திட்டம்.**- 2006.04.25 ஆந் திகதிய 06/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் எஸ். எல். 1-2006 சம்பளத் தொகுதிக்கு இணங்க எஸ்எல் 1 ரூபா 22,935-10 x 645-8 x 790-17 x 1,050-ரூபா 53,555.

இப்பரீட்சையின் மூலம் இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கான ஆட்சேர்ப்புக்களே மேற்கொள்ளப்படுகின்றன.

10. **ஆரோக்கியம் மற்றும் நடத்தை.**- பரீட்சார்த்திகள் சுகாதார ரீதியில் உரிய தகைமைகளைக் கொண்டிருப்பதாகவும் சிறந்த நன்னடத்தை உடையவராக இருப்பதாகவும் திருப்தியடைதல் வேண்டும். அவர் சிறந்த கண் பார்வை உடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் பணிபுரிவதற்குப் பொருத்தமான உடல் ஆரோக்கியத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வைத்தியப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

11. **தகைமைகள்.**- இப்பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள்-

(i) இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் இவ்வறிவித்தலின் கீழ் தேவையான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iv) மேலே 2 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பிக்கும் பதவிகளுக்கான தகைமைகளை கீழே குறிப்பிட்டுள்ளவாறு பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

| திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| 1. தேசிய மிருகக் காட்சிசாலைகள் திணைக்களம் | 1. உதவிப் பணிப்பாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல் விஞ்ஞானம் தொடர்பான கௌரவ பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஆ) இரசாயனவியல், உயிரியல், தாவரவியல் ஆகிய பாடங்களைக் கொண்ட (முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு) சாதாரண பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் |
| 2. இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் | 1. அரசாங்க உதவி இரசாயனப் பகுப்பாய் வாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் தொடர்பான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியல் தொடர்பான விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அத்துடன் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயன வியல் தொடர்பான எம். எஸ்சி அல்லது பீ.எச்டீ பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்ட அடிப்படைப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து இரசாயனவியல் தொடர்பான எம். எஸ்சி அல்லது பீ. எச்டீ அல்லது பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; |
| | 2. சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள்தொடர்பான பரிசோதகர் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானம், பௌதிகவியல், இரசாயனவியல் தொடர்பான I ஆம் வகுப்பு அல்லது II ஆம் வகுப்பு கௌரவ பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 3. நீர்ப்பாசனத் திணைக்களம் | 1. உதவி மண் இரசாயன வியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பிரதான அல்லது துணைப் பாடமாக விவசாய இரசாயனவியலை அல்லது இரசாயனவியலைக் கொண்ட விவசாயம் அல்லது விஞ்ஞானம் தொடர்பான விசேட பட்டம் ஒன்றைப் பெற்றி ருத்தல் ; அல்லது |
| | | (ஆ) இரசாயனவியலை அல்லது விவசாய இரசாயன வியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பிலான விஞ்ஞானமானிப் பட்டம் |
| | | **குறிப்பு**.- நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவியாளராக அல்லது மண் பகுப்பாய் வாளராகப் 10 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூரணப் படுத்தியுள்ள இரசாயனவியல் அடங்கலாக அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட சாதாரண வகுப்பிலான விஞ்ஞான மாணிப் பட்டத்தைக் கொண்டுள்ள உள்ளக |

| *திணைக்களம்* | *பதவி* | *கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|
| | | அலுவலர்கள் வெளி விண்ணப்பதாரர்களுடன் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர். |
| 4. தொழில் திணைக்களம் | 1. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தொழில்சார சுகாதாரம்) | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல் தொடர்பான முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு விசேட பட்டம் ; அல்லது<br><br>(ஆ) இலங்கை இரசாயனவியலாளர் நிறுவனத்தில் பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தின் ரோயல் இரசாயனவியலாளர் நிறுவனத்தின் அங்கத்தவராக இருத்தல் ; அல்லது<br><br>(இ) இரசாயனவியல், கைத்தொழில் நச்சுவியல், கைத்தொழில் சுகாதாரம் அல்லது கைத்தொழில் மாசடைவுடன் தொடர்புடைய பிரயோக இரசாயன வியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 5. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | 1. உதவிப் பணிப்பாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விவசாயம் தொடர்பான இளமாணிப் பட்டம் ; அல்லது<br><br>(ஆ) விவசாயம் தொடர்பான பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தாவரவியல் அல்லது உயிரியல் மற்றும் இரசாயனவியல், விலங்கியல், பொருளியல், கணிதம், மனித வாழ்வியல், உயிர் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றுடன் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விஞ்ஞானமானிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது<br><br>(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட தாவரவியல் அல்லது உயிரியல், இரசாயனவியல், விலங்கியல், பொருளியல், கணிதம், மனித வாழ்வியல், உயிர் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் ஒன்றை மேலதிக பாடமாகக் கொண்டு தாவரவியல் அல்லது இரசாயனவியல் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| | 2. ஆராய்ச்சி உத்தியோகத்தர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாயப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல்<br><br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பின்வரும் பட்டங்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் -<br><br>(i) தாவரவியலைப் பிரதான பாடமாகவும் இரசாயனவியலை அல்லது விலங்கியலை மேலதிக பாடமாகவும் கொண்டு பெறப்பட்ட பட்டம் ஒன்று ; அல்லது<br><br>(ii) கணிதத்தை பிரதான பாடமாகவும் தாவர வியலை அல்லது விலங்கியலை அல்லது |

| திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| | | இரசாயனவியலை மேலதிக பாடமாகவும் கொண்டு பெறப்பட்ட பட்டம் ஒன்று ; அல்லது |
| | | (iii) இரசாயனவியலை பிரதான பாடமாகவும் தாவரவியலை அல்லது விலங்கியலை மேலதிக பாடமாகவும் கொண்டு பெறப்பட்ட பட்டம் ஒன்று ; அல்லது |
| | | (iv) விவசாயத்துடன் தொடர்புடைய பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (v) கணிதம் மற்றும் உயிரியலை உள்ளடக்கிய சாதாரண இளமாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 6. வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 1. உதவி வனப் பாதுகாவலர் | (அ) தாவரவியலை ஒரு பாடமாகவும் விலங்கியலை அல்லது இரசாயனவியலை மேலதிக பாடமாகவும் கொண்டு பெறப்பட்ட பட்டம் ஒன்று ; அல்லது |
| | | விலங்கியலை ஒரு பாடமாகவும் தாவரவியலை மேலதிக பாடமாகவும் கொண்டு பெறப்பட்ட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் ஒன்று ; அல்லது |
| | | (ஆ) உயிரியலை ஒரு பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் வகுப்பு அல்லாது இரண்டாம் வகுப்பு விஞ்ஞானமானிப் பட்டம் ஒன்று ; |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விவசாயத்துறையில் பெறப்பட்ட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு அல்லது கௌரவப் பட்டம் ஒன்று ; அல்லது |
| | | (ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்று ; அல்லது |
| | | (உ) வனவியல் தொடர்பான பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 7. வளிமண்டலவியல் திணைக்களம் | 1. வளிமண்டலவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதிகவியலை அல்லது கணிதத்தைப் பிரதான பாடமாகக் கொண்டு பெறப்பட்ட விசேட விஞ்ஞானமாணிப் பட்டம் (கணிதத்தில் விசேட பட்டம் பெற்ற விண்ணப்பதாரிகள் விஞ்ஞான தகைமைகாண் பரீட்சையில் பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.) ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதிகவியலையும் கணிதத்தையும் பாடங்களாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பொது விஞ்ஞானமாணிப் பட்டம் ; அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வளிமண்டலவியல் அல்லது பௌதிகவியல் |

| திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| | | துறையில் பெறப்பட்ட கலாநிதி (பீ.எச்டி) அல்லது விஞ்ஞான முதுமாணி (எம். எஸ்சீ) அல்லது எம்ஃபில் அல்லது பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். |
| | | **குறிப்பு**.- பௌதிகவியல், கணிதம் ஆகிய பாடங்களுடனான அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பொது விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றுடன் வளிமண்டலவியல் திணைக்களத்தில் 10 வருட சேவைக்காலத்துடன் தரமுயர்வுக்கு உடன் முன்னர் 5 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்ட இலங்கை தொழில்நுட்ப சேவை அலுவலர்கள் வெளிவாரி விண்ணப்பதாரிகளுடன் ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். |
| 8. நூதனசாலைகள் திணைக்களம் | 1. உதவிப் பணிப்பாளர் (விலங்கியல்) | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான விலங்கியல் தொடர்பான சிறப்புப் பட்டம் ஒன்று அல்லது அதனைவிட உயர் பட்டம் ஒன்று ; அத்துடன் |
| | | (ஆ) சிரேஷ்ட பாடநெறிச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் அல்லது வேறு உயர் பரீட்சையொன்றில் சிங்கள பாடத்தில் அல்லது சிங்கள இலக்கிய பாடத்தில் விசேட சித்தியைப் பெற்றிருத்தல். |
| 9. சுகாதார சேவைகள் திணைக்களம் | 1. உயிர் இரசாயனவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சிறப்பு பட்டம் அல்லது அதற்குச் சமனான தகைமை ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட பொது விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் இரசாயனவியலில் பீ.எச்டி அல்லது எம்.எஸ்சீ போன்ற பட்டப்பின் பட்டம் ஒன்று. |
| | | **குறிப்பு**.- இரசாயனவியல் பாடத்துடன் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொது விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றுள்ள சுகாதார அமைச்சில் 10 வருடங்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும் இப்பத விக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். |
| | 2. பௌதிகவியலாளர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பௌதிகவியலில் (விசேட) சிறப்புப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஆ) விசேட பௌதிகவியல் பட்டம் அல்லது பௌதிக வியலை ஒரு பாடமாகக் கொண்ட விஞ்ஞான மாணிப் பட்டம் அல்லது கதிர்வீச்சுக் கலைஞராக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 5 வருடங் களுக்குக் குறையாத சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள். |

| *திணைக்களம்* | *பதவி* | *கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்* |
|---|---|---|
| | 3. மருந்துப் பகுப்பாய்வாளர் (இரசாயனவியல்) | (அ) இரசாயனவியல் தொடர்பான விசேட விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றிருத்தல் ;<br>(ஆ) இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட விஞ்ஞானமானிப் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட இரசாயனவியல் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடங்களில் பட்டப்பின் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது<br>(இ) மருந்தியல் (Pharmacy) தொடர்பான விஞ்ஞான மாணிப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது<br>(ஈ) ரோயல் இரசாயனவியல் நிறுவனத்தில் அல்லது (இலங்கை) இரசாயனவியல் நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.<br>**குறிப்பு**.- இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெறப்பட்ட பொது விஞ்ஞான மாணி பட்டத்துடன் சுகாதார அமைச்சில் ஆகக்குறைந்தது பத்து வருட சேவைக் காலத்தைக் கொண்ட மருந்தியலாளர்களும் மருத்துவ ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர்களும் விண்ணப்பங் களைச் சமர்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். |
| | 4. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயற்கை உற்பத்திகள் இரசாயனவியல்) | (அ) இரசாயனவியல் தொடர்பான விசேட சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டம் (முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு) ;<br>(ஆ) இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்ட பொது விஞ்ஞானமாணி பட்டத்துடன் எம்எஸ்சீ அல்லது பீஎச்டி பட்டம் பெற்றிருத்தல் (இயற்கை உற்பத்தி இரசாயனவியல் தொடர்பான ஆய்வின் மூலம்). |
| | 5. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பூச்சியியல்) | (அ) பூச்சியியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுட னான விசேட சிறப்பு விலங்கியல் விஞ்ஞான மாணிப் பட்டம் ; அல்லது<br>(ஆ) (விலங்கியல் பாடத்துடனான) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பொது விஞ்ஞானமாணிப் பட்டத்துடன் எம்எஸ்சீ அல்லது பீஎச்டி பட்டம். |
| | 6. ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தடுப்பு மருந்தும் மற்றும் உற்பத்தி) | (அ) இரசாயனவியல் தொடர்பான விசேட விஞ்ஞான மாணி (சிறப்பு) பட்டம் ; அல்லது<br>(ஆ) இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்ட விலங்கியல் எம்எஸ்சீ பட்டம் ; அல்லது<br>(இ) இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பொது விஞ்ஞானமாணிப் பட்டம் மற்றும் (நுண்ணுயிரியல் அல்லது உயிர் இரசாயனவியல் தொடர்பான பட்டப்பின் பட்டம் ஒன்று). |

| திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| | 7. ஆராய்ச்சி உத்தியோகத்தர் நுண்ணுயிரியல் (பக்டீரியா மற்றும் வைரஸ்) | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து நுண்ணுயிரியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட விசேட முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு விசேட (சிறப்பு) தாவரவியல் விஞ்ஞானமாணிப் பட்டம் ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தாவரவியலை ஒரு பாடமாகக் கொண்டு பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பொது விஞ்ஞானமாணிப் பட்டம் ; அத்துடன் நுண்ணுயிரியல் தொடர்பான எம். எஸ்சீ அல்லது பீ. எச்டீ பட்டம் ; அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பி. எஸ்சீ பட்டம் அத்துடன் நுண்ணுயிரியல் தொடர்பான பட்டப்பின் பட்டம். |
| | 8. ஆராய்ச்சி உத்தியோகத்தர் -உயிர் இரசாயனவியல் | (அ) இரசாயனவியல் தொடர்பான முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விசேட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஆ) சிகிச்சையியல், இரசாயனவியல் தொடர்பான எம். எஸ்சீ அல்லது பீ. எச்டீ பட்டத்துடன் விசேட விஞ்ஞானமாணி (சிறப்பு) பட்டம் ; அல்லது |
| | | (இ) (இரசாயனவியலுடனான) பொது விஞ்ஞான மாணிப் பட்டம் மற்றும் சிகிச்சையியல் உயிர் இரசாயனவியல் தொடர்பான எம். எஸ்சீ பட்டம் |
| | 9. பிரதேச மலேரியா கட்டுப் பாட்டு உத்தியோகத்தர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பூச்சியியலை அல்லது ஒட்டுண்ணியியலை பிரதான பாடமாகக் கொண்டு பெறப்பட்ட விலங்கியல் அல்லது உயிரியல் விஞ்ஞானமாணி (பி. எஸ்சீ) விசேட பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பூச்சியியல் அல்லது ஒட்டுண்ணியியல் தொடர்பான கலாநிதி (பீ. எச்டி) அல்லது விஞ்ஞான முதுமாணி (எம். எஸ்சீ) பட்டம் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பிரயோகப் பூச்சியியல் அல்லது ஒட்டுண்ணியியல் தொடர்பான மூன்று வருட அனுபவத்துடனான விஞ்ஞானமாணிப் பட்டம் ஒன்றை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து பெற்றிருத்தல். (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களையும், அரசாங்க திணைக்களங்களையும் நியதிச் சட்ட கூட்டுத்தாபனங்களையும் சபைகளை யும் குறிக்கும்.) |
| | 10. இரசாயனவியலாளர் | (அ) இரசாயனவியலில் விஞ்ஞானமாணி (பி. எஸ்சீ) பட்டம் ; அல்லது இலங்கை இரசாயனவியல் சங்க அங்கத்துவம் பெற்ற அதற்குச் சமனான தகைமையுடன் உணவுப் பகுப்பாய்வு தொடர்பான இரண்டு வருட அனுபவம் ; அல்லது |

| திணைக்களம் | பதவி | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|
| | | (ஆ) உணவு விஞ்ஞானம் (Food Science) மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான விஞ்ஞானமாணி அல்லது அதற்குச் சமமான பட்டம் ஒன்றுடன் உணவுப் பகுப்பாய்வு தொடர்பான இரண்டு வருட அனுபவம். |
| | 11. விஞ்ஞான உத்தியோகத்தர் | (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான இரசாயனவியல் சிறப்புப் பட்டதாரியாக இருத்தல் ; அல்லது |
| | | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட அதற்குச் சமனான தரத்திலான பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் கொண்ட சாதாரண பட்டம் ; அல்லது |
| | | (இ) இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் அல்லது பெரிய பிரித்தானியா மற்றும் அயர்லாந்தின் இரசாயனவியல் நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றிருத்தல் ; அல்லது |
| | | (ஈ) இரசாயனவியல் தொடர்பில் அதனைவிட உயர் கல்வித் தகைமையைக் கொண்டிருத்தல். |

(v) 2013, பெப்புருவரி 15 ஆந் திகதியன்று 22-35 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். (அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை பெறும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.)

(vi) ஏதேனும் சமயச் சபையின் துறவியாக எவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். அதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மாவட்ட/பிரதேச செயலகமொன்றில் பரீட்சைத் திணைக்களத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காகச் செலுத்துதல் வேண்டும். மாவட்ட/ பிரதேச செயலகமொன்றில் விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை விண்ணப்பதாரிகள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

13. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக, 8 1/2" x 12" (ஏ4) அளவிலான கடதாசிகளில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1.0 முதல் 3.9 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் முதலாம் பக்கத்திலும், 3.10 முதல் 5.0 வரையான இலக்கங்களில் அடங்கும் விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விண்ணப்பதாரிகள் விசேடமாகக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்களில் குறிப்பிடும் தகவல்களைத் தமது கையெழுத்துக்களில் தெளிவாக எழுதுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையாகத் தகவல்கள் வழங்கப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமைய முடியும்). பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்று விண்ணப்பதாரர்கள் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட முடியும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பங்களை நிரப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படுவது கட்டாயமாகும்.

(இ) பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் (ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 2013, பெப்புருவரி 15 ஆந் திகதிக்கு முன்னர்

கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013" என்று தெளிவாக எழுதுதல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரினால் அல்லது ரூ. 2,40,360 இற்கு அதிக வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் தொலைந்துபோதல், தாமதமாகக் கிடைத்தல் என்பன தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தினதும், கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினது பிரதிகளையும், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டையும் உங்கள் கோரிக்கையின் பிரதியொன்றை உங்களிடம் வைத்துக்கொண்டு, இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். கொழும்புக்கு வெளியில் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்டு அனுப்புங்கள். (பரீட்சைத் திணைக்களத்தின் தொலைநகல் இல. 011-2784233).

14. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். தமது அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாக அமையும்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதல் நாளில், தமது கையொப்பங்களை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்றவேண்டிய சட்டத் தொகுதியொன்று இவ்வறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(இ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் காணப்பட்ட விண்ணப்பதாரர்களின் சேவை நிலையமே, பரீட்சை தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் ஏற்புடையதாவதுடன் விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் நிகழும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டா.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கான ஆதாரமாக அமைய மாட்டாது.

15. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் அனைத்துப் பாடங்களின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிப்பது அவசியமாகும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

16. **பிழையான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை**.- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு விடயம் பொய்யானது என அறிந்த நிலையில் அவர் அதனைச் சமர்ப்பித்திருப்பின், அல்லது ஏதேனும் ஒரு விடயத்தை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

17. இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழு அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*18.* **பரீட்சை நடாத்தப்படும் முறை மற்றும் பரீட்சை மொழி மூலம்**.- (அ) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பட்டம்பெற்ற மொழி மூலத்தில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகள் தாம் தகைமை பெற்ற பட்டத்திற்கான பாடங்களில் இரண்டு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பட்டத்திற்கான பாடத்தில் அவர் அதிக எண்ணிக்கையான பாடங்களுக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடங்களுக்கு ஒரு மொழி மூலத்திலும் மேலதிக பாடங்களுக்கு வேறு ஒரு மொழி மூலத்திலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டம் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) மேலே (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்ட தகுதிவாய்ந்த பட்டம் என்பது 11 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டத் தகைமையினைக் குறிக்கும்.

(ii) பரீட்சார்த்திகள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாக்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) தமது விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள மொழி மூலங்களை மாற்றுவதற்கு விண்ணப்பதாரிகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

*19.* **தெரிவுசெய்யப்படும் முறை**.- பின்வரும் வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப் படுவர் :-

(i) நுண்ணறிவு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(ii) பொது வினாப்பத்திரம் (காலம் : 3 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி 40% ஆகும்).

*20.* **நியமனம் வழங்கப்படும் முறை**.- (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவி இரசாயனப் பகுப்பாய்வாளர், தொழில் திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி வனப் பாதுகாவலர், நூதனசாலைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் சந்தேகத்திற்கிடமான ஆவணங்கள் தொடர்பான உதவிப் பகுப்பாய்வாளர், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின்கீழ் உள்ள இலங்கை விஞ்ஞான சேவையின்கீழ் அடங்கும் அனைத்துப் பதவிகள் தொடர்பிலும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானத்திற்கு இணங்க அவரின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கின் அடிப்படையில் மாத்திரம் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

(ii) வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானியலாளர், இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் உதவி இரசாயனவியல் பகுப்பாய்வாளர், ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக மேலே குறிப்பிட்டவாறு எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையிலும் அவ்விண்ணப்பதாரர்களில் உயர்ந்தபட்ச மொத்தப் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் திறமை ஒழுங்கிற்கு இணங்கத் தெரிவுசெய்யப்படுவர். (புள்ளி வழங்கும் முறை மற்றும் வழங்கும் புள்ளிகளின் எண்ணிக்கை என்பன நியமன அதிகாரியினால்/ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்போது தீர்மானிக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது நியமனம் கிடைப்பதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்தமைக்கான சான்றாக அமைய மாட்டாது.)

*21.* **பாடத்திட்டம்**.- (i) நுண்ணறிவு (காலம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.- பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், முரண்பாடு தீர்த்தல், தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல், அனுமானிக்கும் ஆற்றல் என்பவற்றைச் சோதிக்கும் வகையில் இவ்வினாப்பத்திரம் அமையும்.

(ii) பொது வினாப்பத்திரம் (காலம் : 3 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்.- அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் அறிவியல் ரீதியான விடயங்களை உள்ளடக்கிய கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

22. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ், ஆங்கிலப் பதிப்புக்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏதாவது காணப்படுமாயின் சிங்கள மொழிப் பதிப்பே செல்லுபடியானதாக அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2012, திசெம்பர் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (2013)**

Open Competitive Examination For Recruitment to Class II Grade II of Sri Lanka Scientific Service (2013)

(அலுவலக உபயோகத்திற்கு)

1. மொழி மூலம் :

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* விண்ணப்பங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

2. விண்ணப்பிக்கும் பதவி/பதவிகள் :

| திணைக்களம் | பதவி | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | | |

3. தனிப்பட்ட தகவல்கள் :

3.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்), முதலெழுத்துக்கள் பெயரின் இறுதியில் இடப்படுதல் வேண்டும் :
உதாரணம் : RANASINGHE R. M. A. K. :----.

3.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

3.4 தேசிய அடையாள அட்டை இல. :

3.5 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்), (பரீட்சை அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பப்படும்) :----.

3.6 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3.7 தபால் நகரம் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.

3.8 பால் வேறுபாடு :

ஆண்-0
பெண்-1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.9 இனம் (சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனையோர்-5) :

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.10 விவாகமானவர்/விவாகமாகாதவர் :

விவாகமாகாதவர்-1
விவாகமானவர்-2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.11 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

3.12 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. தகைமைகள் :

(i) பட்டம் பெற்ற திகதி :----.
(இத்தகைமையைக் கொண்டுள்ளீரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு தயவுசெய்து இவ்வறிவித்தலின் 11 (iv) பந்தியை தயவுசெய்து நன்றாக வாசித்துக்கொள்ளவும்) :

| பரீட்சை/ பட்டம் | வகுப்பு | வருடம் | பாடங்கள் | பல்கலைக்கழகம்/ நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) தொழிற் தகைமை :----.

(அ) பதிவு இலக்கம் :----.
(ஆ) உள்ளக/வெளியக :----.
(இ) பரீட்சை இலக்கம் :----.
(ஈ) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :----.

(iii) சித்தியடைந்துள்ள மிக உயர்ந்த பரீட்சை :-

சிங்களம் :----.
தமிழ் :----.
ஆங்கிலம் :----.

(iv) பாடசாலையை விட்டு விலகிய பின் செய்த தொழில் மற்றும் பெற்றுக்கொண்ட பயிற்சி பற்றிய விபரங்கள் (சேவையில் சேர்ந்த, சேவையைவிட்டு விலகிய திகதிகளையும் விலகிய காரணங்களையும் குறிப்பிடுக,) :----.

(v) தற்போது வகிக்கும் பதவி பற்றிய விபரம் :-

(அ) பதவி :----.
(ஆ) திணைக்களம்/நிறுவனம் :----.
(இ) நியமனத் திகதி :----.
(ஈ) நிரந்தர/ஓய்வூதியம் உரித்தான/ஓய்வூதியம் உரித்தற்ற/தற்காலிகமானது என்பது தொடர்பானது :----.
(உ) பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா என்பது :----.
(ஊ) பதவிக்கான சம்பள அளவுத்திட்டமும் தற்போது பெறும் சம்பளமும் :----.

5. பணம் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை உரிய முறையில் ஒட்டுக :

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை உங்களிடம் வைத்திருப்பது நன்று) |

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

6. நீதிமன்றமொன்றில் ஏதேனும் குற்றம் ஒன்றுக்காக எப்போதாவது தவறிழைத்தவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அக்குற்றத்திற்காக விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :----.

7. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ........................................ ஆந் திகதிய ....................................... ஆம் இலக்க பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவன் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் யாதாயினும் தீர்மானங்களுடன் உடன்படுகின்றேன். மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் 13(ஈ) இற்கு அமைவாக) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .............................................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும், ........................ ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

9. **விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் உள்ளவர் எனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

மேலே பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை/கீழே உள்ளவாறு திருத்தப்பட வேண்டும் என்றும், அவருடைய பணியும் நடத்தையும் ....................................... என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். தற்போது வகிக்கும் பதவியில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

*1-352*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.